மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21 ஆம் நாள் திங்கள்கிழமை
இ.ம.எண்.02/2022
அ.வ.எண்.99/2022

1. கருப்பண்ணன் (இறந்தவர்)
2. வளர்மதி
3. உதயகுமார்
4. உதய கண்ணன் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. பரமசிவம்
2. மாதம்மாள்
3. முத்துசாமி
4. பழனிசாமி
5. ஜெயம்மாள் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 03.09.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு 1ம் மனுதாரர் இறந்தவராகவும், 2 முதல் 4 வரையிலான மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.K.சத்தியப்பிரியா அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.L.கணபதிசுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சிவபிரகாசம் அவர்கள் ஆஜராகியும், 4, 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.செல்வம் அவர்கள் ஆஜராகியும், சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இருந்து வந்த இம்மனுவில் இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம், கட்டளை 39 விதிகள் 1, 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) மனுதாரர்கள்/வாதிகள் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள்

கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, வழக்கு நிலுவையில் உள்ளது. தாவா சொத்தும் இதர சொத்துக்களும் ஆதியில் ஒரு பெருமாள் கவுண்டர் மனைவி சின்னதாயிக்கு ச.எண்.169/1, பு.ஏ.2.89 நிலம் பாத்தியப்பட்டதாகும். மேற்படி சின்னதாயிக்கு மல்லுபையன், அழகப்பன், பெருவுளி, சின்னபையன், 1ம் பிரதிவாதியான பரமசிவம் ஆகியோர் வாரிசுகள் ஆவர். இதில் அழகப்பன் மகன் 1ம் மனுதாரர் ஆவார். 2 முதல் 4 பிரதிவாதிகள் இறந்த பெருவுளியின் வாரிசுகள் ஆவர். மேற்படி சின்னதாயிக்கு பாத்தியப்பட்ட நிலத்தை அவரது மகன்கள் அனைவரும் வாய்மொழியாக பாகம் பிரித்துகொண்டு பட்டா பெற்று அனுபவித்து வருகிறார்கள்.

(ii) 1ம் மனுதாரரின் நிலமான ச.எண்.169/1B3க்கும், அதிலுள்ள வீட்டுக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட ச.எண்.169/1B4 வழியாக 156 அடி நீளமும், 10 அடி அகலமும் கொண்ட மண்பாதை வழியாக நீண்டகாலமாக மனுதாரர்களும், அவர்களது முன்னோர்களும் அனுபவித்து வருகின்றனர். வெள்ளார் முதல் மேச்சேரி வரை செல்லும் தார்சாலையிலிருந்து தாவா தடமான மண்பாதை மேற்கு நோக்கி செல்கிறது. மேற்படி மனுதாரர்களின் நிலத்தை அடைய தாவா தடத்தை தவிர வேறு தடம் ஏதும் இல்லை. இந்நிலையில் கடந்த 30.04.2022ம் தேதியன்று தாவா சொத்தை குறைந்த விலைக்கு பிரதிவாதிகள் கேட்டதற்கு மனுதாரர்கள் தர மறுத்ததால் மனுதாரர்கள் தங்களது நிலங்களுக்கும், வீட்டுக்கும் போக முடியாதபடி பல்வேறு இடையூறுகள் செய்தனர்.

(iii) மேலும் மேற்படி நிலத்தை உழுவதற்கு டிராக்டர் போன்ற வாகனங்கள் செல்லவும் எதிர்மனுதாரர்கள் தடை செய்தனர். மீண்டும் கடந்த 31.05.2022ம் தேதியில் தாவா தடத்தை மறித்து கட்டுமானங்கள் செய்ய முற்பட்டனர். அதனை மனுதாரர்கள் அக்கம் பக்கத்தினர் உதவியுடன் தடுத்தார். இருப்பினும் மேற்படி நிலத்தை விலைக்கு தராவிடில் தாவா தடத்தை அனுபவிக்க விடமாட்டோம் என எதிர்மனுதாரர்கள் மிரட்டி விட்டு சென்றனர். எதிர்மனுதாரர்கள் தாவா தடத்தை எந்நேரத்திலும் தடைசெய்ய முயற்சி செய்வார்கள் என்பதால் மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரை, குறிப்பாணையின் பேரில் இம்மனுவின் 1ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–</u>

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. வெள்ளார் முதல் மேச்சேரி வரை செல்லும் தார்சாலையிலிருந்து மேற்கு நோக்கி ச.எண்.169/1B4 ன் வழியாக ச.எண்.169/1B3 க்கு செல்லும் சுமார் 156 அடி நீளம், 10 அடி அகல கொண்ட மண்பாதை நிலையில் இல்லை. ச.எண்.169/1B4 1ம் எதிர்மனுதாரருக்கு மட்டுமே பாத்தியப்பட்ட பட்டா நிலம். அதில் மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை. 1ம் மனுதாரரின் தந்தை அழகப்பன் மற்றும் அவரது குடும்பத்தினர் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து தடபாத்திய உடன்படிக்கை எழுதி பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி ச.எண்.169/1ல் 10 அடி அகலம் கிழமேல் 175 அடி நீளமுள்ள தடமும், ச.எண்.173/1ல் கால் வழித்தடமும் விடப்பட்டது. அது புலவரைபடத்தில் குறிப்பிட்டுள்ளது.

(ii) அதன்படி ச.எண்.169/1B3 ல் இருந்து வடக்கே சென்று ச.எண்.169/1B2 வழியாக கால்நடையாகவும், ச.எண்.169/1A2, 1A1 வழியாகத்தான் செல்ல வேண்டும். ஆனால் அந்த பத்திர பதிவை மறைத்து பொய்யான சொத்துவிவரம் கொடுத்துள்ளனர். 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட ச.எண்.169/1B4 ல் மனுதாரர்களுக்கு எந்தவொரு தடபாத்தியதை உரிமையும், துய்ப்புரிமையும் கிடையாது. கடந்த 30.04.2022 ல் எதிர்மனுதாரர்கள் நிலத்தை விலைக்கு கேட்கவும் இல்லை. 1ம் எதிர்மனுதாரர் தன் விவசாய நிலத்தில் கட்டுமான பணி செய்ய முயற்சி செய்ததாக கூறுவது தவறு. உண்மையான உரிமையாளருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற மனுதாரர்களுக்கு உரிமையில்லை. அதேபோல் இல்லாத தடத்திற்கு விளம்புகையும் மனுதாரர்கள் கேட்க முடியாது. வழக்குமூலம், நீதிமன்ற கட்டணம், சொத்துவிவரம் தவறு. மனுதாரர்கள் துாய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை. எனவே இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1ம் எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

<u>3) 2ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 3ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–</u>

<u>(குறிப்பாணையின் பேரில் இந்த எதிருரை 4, 5 எதிர்மனுதாரர்களால் தங்களது எதிருரையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது)</u>

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர்கள் கூறுவதுபோல் எவ்வித மண்பாதையும் இல்லை. மனுசொத்து ஆதியில் சின்னத்தாயிக்கு பாத்தியப்பட்டது என்பதும், அவரது வாரிசுகள் பற்றிய விவரங்களும், மனுதாரர், எதிர்மனுதாரர்களிடையே உள்ள உறவுமுறைகள் சம்மந்தமான விவரங்களும், தரப்பினர்களிடையே வாய்மொழி பாகப்பிரிவினைக்கு ஏற்பட்டு, அவரவர்களுக்கு பிரிந்த நிலத்தை தனித்தனியாக பட்டா பெற்று அனுபவித்து வருவதாக கூறுவதும் உண்மை. மனுதாரர்கள் ச.எண்.169/1B3 ல் உள்ள நிலத்திற்கும், அதிலுள்ள வீட்டிற்கும் ச.எண்.169/1B4 ல் அமைந்துள்ள மண்பாதை வழியாக தான் சென்று வெள்ளார் மேச்சேரி செல்லும் தார்சாலையை அடைந்து வந்ததாகவும், மனுதாரர்களும், அவர்களது முன்னோர்களும் மேற்படி தடத்தை அனுபவித்து வந்ததாகவும், மேற்படி மண்பாதையை தவிர வேறு பாதை இல்லை என்பதும் பொய்யாகும்.

(ii) கடந்த 30.04.2022ம் தேதியன்று தாவா சொத்தை குறைந்த விலைக்கு எதிர்மனுதாரர்கள் கேட்டதாகவும், மனுதாரர்கள் தங்களது நிலங்களுக்கும், வீட்டுக்கும் போக முடியாதபடி பல்வேறு இடையூறுகள் செய்ததாகவும், மேற்படி நிலத்தை உழுவதற்கு டிராக்டர் போன்ற வாகனங்கள் செல்ல எதிர்மனுதாரர்கள் தடை செய்ததாகவும், கடந்த 31.05.2022ம் தேதியில் தாவா தடத்தை மறித்து கட்டுமானங்கள் செய்ய முற்பட்டதாகவும் கூறுவது பொய்யாகும். 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் 1ம் மனுதாரரின் சித்தப்பா பெருவுளியின் வாரிசுகள் ஆவர். மனு சொத்தான ச.எண்.169/1 ஆனது 2 ஏக்கர் 89 செண்ட் நிலமாகும். ஆதியில் மனு சொத்து எதிர்மனுதாரர்களின் பாட்டி சின்னதாயிக்கு பாத்தியப்பட்டு, பின்னிட்டு மனு சொத்தை அவரது வாரிசுகள் வாய்மொழியாக பாகம்பிரித்து கொண்டனர்.

(iii) அதன்படி 2 முதல் 5 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் பெருவுளிக்கு ஒதுக்கப்பட்ட ச.எண்.169/1B5 நிலமானது பட்டா எண்.427 2 முதல் 5 எதிர்மனுதாரர்களின் பெயர்களில் உள்ளது. இவர்கள் நிலத்திற்கு மேற்குபுறமாக மனுதாரர்களின் நிலம் அமைந்துள்ளது. அதுபோல் 2 முதல் 5 எதிர்மனுதாரர்களின் நிலத்திற்கு வடபுறமாக 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட ச.எண்.169/1B4 அமைந்துள்ளது. மேற்படி நிலத்தை பொறுத்து 2 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையோ, உரிமை மூலமோ

கிடையாது. எனவே மேற்படி மனுவை பொறுத்து 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் அவசியமற்ற தரப்பினர்கள் ஆவர். மனுதாரர்கள் வேண்டுமென்றே பொய்யான சங்கதிகளை கூறி 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை மனுவில் தரப்பினர்களாக சேர்த்துள்ளனர். மனுதாரர்களுக்கு அவரது பெரியப்பா மல்லுபையன் நிலத்திற்கு வடபுறம் மண்பாதை விடப்பட்டுள்ளது. மேற்படி மண்பாதையானது சின்னதாயின் அனைத்து வாரிசுகளுக்கும் பொதுவாக விடப்பட்டுள்ளது. மேற்படி மல்லுபையனின் நிலத்திற்கு வடபுறமுள்ள பொது மண்பாதையையே மனுதாரர்கள் உயபோகித்து வருகிறார்கள். தற்போது பொது வழித்தடத்தை மறைத்து வேண்டுமென்றே 1ம் எதிர்மனுதாரர் நிலத்தில் மண்பாதை உள்ளதாக கூறி பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

4) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>5) பிரச்சினை :</u>–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

<u>6) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரருக்கு சொந்தமான ச.எண்.169/1B3க்கும், அதிலுள்ள வீட்டுக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட ச.எண்.169/1B4 வழியாக வெள்ளார் முதல் மேச்சேரி வரை செல்லும் தார்சாலையிலிருந்து 156 அடி நீளமும், 10 அடி அகலமும் கொண்ட மண்பாதை செல்கிறது என்றும், மேற்படி மண்பாதையை மனுதாரர்களும், அவர்களது முன்னோர்களும் நீண்டகாலமாக அனுபவித்து வருகின்றனர் என்றும், எதிர்மனுதாரர்கள் மேற்படி மண்பாதையின் பௌதீக தன்மையை மாற்ற முயற்சி செய்து வருவதாலும், மேற்படி தடவழியை மனுதாரர்கள் பயன்படுத்துவதற்கு இடையூறு செய்வதாலும், இவ்வழக்கை தாக்கல் செய்து அதில், மனுதாரர்கள் எதிர்மனுதாரருக்கு எதிராக

இவ்வழக்கை தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வெள்ளார் முதல் மேச்சேரி வரை செல்லும் தார்சாலையிலிருந்து மேற்கு நோக்கி ச.எண்.169/1B4ன் வழியாக ச.எண்.169/1B3க்கு செல்லும் சுமார் 156 அடி நீளம், 10 அடி அகலத்தில் மனுதாரர்கள் கூறுவது போல் மண்பாதை எதுவும் இல்லை என்றும், ச.எண்.169/1B4 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட பட்டா நிலம் என்றும், அதில் மனுதாரர்களுக்கு எந்தவொரு உரிமையும், தடமும் இல்லை என்றும், கடந்த 11.07.1975ம் தேதிய தடபாத்திய உடன்படிக்கைபடி ச.எண்.169/1ல் 10 அடி அகலம் கிழமேல் 175 அடி நீளமுள்ள தடமும், ச.எண்.173/1ல் கால் வழித்தடமும் மனுதாரர்களுக்கு உள்ளது என்றும், மேற்படி தடவழியை மனுதாரர்கள் பயன்படுத்தும் நிலையில், தற்போது துர்லாபம் அடைய இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iii) 2 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களும் அவர்களது முன்னோர்களும் ச.எண்.169/1B3ல் உள்ள நிலத்திற்கும், அதிலுள்ள வீட்டிற்கும் ச.எண்.169/1B4ல் அமைந்துள்ள மண்பாதை வழியாக தான் சென்று வெள்ளார் மேச்சேரி செல்லும் தார்சாலையை அடைந்து வந்ததாகவும், மேற்படி மண்பாதையை தவிர வேறு பாதை இல்லை என்பதும் பொய்யானது என்றும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்களின் நிலத்திற்கு வடபுறமாக 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட ச.எண்.169/1B4 அமைந்துள்ளது என்றும், மேற்படி நிலத்தை பொறுத்து 2 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையோ, உரிமை மூலமோ கிடையாது என்றும், இம்மனுவை பொறுத்து 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் அவசியமற்ற தரப்பினர்கள் ஆவர் என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iv) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், மனுதாரர்கள்/வாதிகள் ச.எண்.169/1B4 நிலத்தின் வழியாக தங்களுக்கு தடவழி பாத்தியம் உள்ளது என விளம்புகை செய்யக்கோரியும், மேற்படி தடவழியை மனுதாரர்கள் பயன்படுத்துவதற்கு எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை

பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. அதே சமயத்தில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் அவ்வாறு மேற்படி ச.எண்.169/1B4 ன் வழியாக மனுதாரர்கள் கூறுவது போல் அவ்வாறு தடவழி எதுவும் நிலையில் இல்லை என்றும், ச.எண்.169/1 மற்றும் ச.எண்.173/1 ஆகியவற்றின் வழியாக மனுதாரர்களுக்கு மாற்றுத் தடவழி உள்ளது என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(v) இச்சூழ்நிலையில் மனுதாரர்கள் தாவாவில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், இந்த இடைநிலை மனுவில் கோரப்பட்டுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் ஒரே மாதிரியான தன்மை கொண்டதாகவும், ஒத்த இயல்புடையதாகவும் உள்ளது தெரியவருகிறது. எனவே மேற்படி பிரச்சனைகளையும், அதன் தகுதிப்பாடுகளையும் இடைநிலை மனுவில் தீர்மானிப்பது என்பது ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்துவதற்கு ஒப்பானதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vi) மேலும் இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், தரப்பினர்களது வாதங்களையும் கருத்தில் கொள்கையில் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரதான பிரச்சனையானது, ச.எண்.169/1B3 ல் உள்ள மனுதாரர்களின் நிலத்திற்கு செல்வதற்கு ச.எண்.169/1B4 ன் வழியாக தடவழி உள்ளது என மனுதாரர்கள் நிரூபித்துள்ளனரா? என்பதும், மேற்படி தடவழியை பயன்படுத்தி தான் மனுதாரர்கள் தங்களது நிலத்திற்கு சென்று வருவதாகவும், மேற்படி தடவழியை தவிர்த்து வேறு மாற்று தடவழி எதுவும் இல்லை எனவும், மனுதாரர்கள் நிரூபித்துள்ளனரா? என்பதும், மேற்படி தடவழியை எதிர்மனுதாரர்கள் அழிக்கவும், அதை மனுதாரர்கள் பயன்படுத்துவதற்கு இடையூறு செய்து வருவதாக மனுதாரர்கள் நிரூபித்துள்ளனரா? என்பதுமே ஆகும்.

(vii) மேற்படி சங்கதிகள் மற்றும் பிரச்சனைகள் குறித்து தரப்பினர்கள் முன் வைக்கும் சாட்சியங்களின் அடிப்படையிலேயே அவற்றை தீர்மானிக்க இயலும். மேலும் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையானது சங்கதி தொடர்புடைய எழுவினாவாக உள்ளது என தெரியவருகிறது. இவ்வழக்கானது பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணைக்காக தயார் நிலையில் உள்ளதை கருத்தில் கொள்கையில், மேற்படி எழுவினாவை வழக்கு விசாரணையின்

பொழுது தரப்பினர்களால் முன்னிலைப்படுத்தப்படும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க இயலும் எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(viii) மாண்பமை உச்சநீதிமன்றத்தால் "*Anand Prasad Agarwalla /Vs/ Tarkeshwar Prasad & Ors", reported in "2001 (5) SCC 578"* என்ற வழக்கில்,

> *"It may not be appropriate for any Court to hold mini trial at the stage of grant of temporary injunction."*

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டின் அடிப்படையில் மனுதாரர்களால் காண்பிக்கப்பட்டுள்ள முதல் தோற்ற வழக்கானது இருதரப்பு ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு விசாரணையின் மூலம் தான் தீர்மானிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இச்சூழ்நிலையில் மாண்பமை உச்சநீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் கூறியுள்ளபடி, இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21 ம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2024.10.21 18:51:28 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:– இல்லை</u>

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 04.04.2022 | கணிணி பட்டா எண்.1437 க்கான பட்டா | கணிணிநகல் |
| ம.சா.ஆ.2 | 08.04.2022 | கணிணி பட்டா எண்.427 க்கான பட்டா | கணிணிநகல் |
| ம.சா.ஆ.3 | 04.04.2022 | கணிணி பட்டா எண்.352 க்கான பட்டா | கணிணிநகல் |
| ம.சா.ஆ.4 | 16.03.2022 | வீட்டுவரி ரசீது | அசல் |
| ம.சா.ஆ.5 | 16.03.2022 | வீட்டுவரி ரசீது | அசல் |
| ம.சா.ஆ.6 | 08.04.2022 | மின்கட்டண ரசீது | அசல் |
| ம.சா.ஆ.7 | | மாதிரி வரைபடம் | அசல் |
| ம.சா.ஆ.8 | 01.08.2022 | புகார் மனு | நகல் |
| ம.சா.ஆ.9 | 01.08.2022 | புகார் மனு ரசீது | அசல் |
| ம.சா.ஆ.10 | 24.05.2024 | மனு ரசீது | அசல் |
| ம.சா.ஆ.11 | 22.11.2022 | முதல் தகவல் அறிக்கை | நகல் |

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:- இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:-</u>

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 11.07.1975 | தடபாத்திய உடன்படிக்கை பத்திரம் | அசல் |
| எ.ம.சா.ஆ.2 | 29.04.1987 | சேலம் கூடுதல் தலைமையிடத்து கூடுதல் தாசில்தாரின் செயல்முறைகள் | அசல் |
| எ.ம.சா.ஆ.3 | 24.06.2024 | கணிணி பட்டா எண்.352 க்கான பட்டா | கணிணிநகல் |
| எ.ம.சா.ஆ.4 | 25.06.2024 | புல வரைபடம் | சான்றிட்ட நகல் |

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.10.21 18:51:38 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.